RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# வேதாரணிய புராணத்தில் சைவசித்தாந்த தத்துவங்கள்

வே. பூரணி [அ, *], ஆ. விண்ணரசி [அ]

[அ] தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை-18, தமிழ்நாடு, இந்தியா

# Saiva Siddhanta Philosophy in the Vedaranyam Puranam: A Study

V. Poorani [a, *], A. Vinnarasi [a]

[a] Department of Tamil, Nirmala College for Women, Coimbatore-18, Tamil Nadu, India

* Corresponding Author: poornimavelusamy09@gmail.com

**ABSTRACT**

Vedaranyam is one of the ancient and significant Saivite sacred sites in Tamil Nadu. It is also known by the distinctive name Thirumaraikadu, associated with the traditional belief that the Vedas worshipped Lord Shiva at this sacred site. The Vedaranyam Puranam not only describes the divine glory of the temple and its devotional traditions but also functions as a philosophical work that communicates Saiva Siddhanta principles through narratives drawn from religious and everyday life. The work presents several fundamental concepts of Saiva Siddhanta, including the three eternal realities of Pati (the Lord), Pasu (the soul), and Pāśa (the bonds), the three impurities (mummalam), the doctrine of divine grace (arul), and the path of Cariya among the four spiritual paths (nāṟpāda) through which the soul progresses toward God. These philosophical principles are communicated through Purāṇic narratives, making complex metaphysical ideas accessible through stories and devotional experiences. The teachings attributed to Paranjothi Munivar demonstrate how Saiva Siddhanta philosophy can be integrated with devotional practice and lived experience. The narratives illustrate the relationship between the individual soul and the divine, the obstacles created by bondage and impurities, and the importance of divine grace in the process of spiritual realization. This article examines the Saiva Siddhanta philosophical concepts found in the Vedaranyam Puranam, focusing particularly on Pati–Pasu–Pasam, the three impurities, divine grace, and the spiritual significance of Cariya. The study highlights how the Purāṇic narrative serves as a medium for communicating Saiva Siddhanta philosophy and demonstrates the significance of the Vedaranyam Puranam as both a devotional text and a source of Tamil Saivite philosophical thought.

**Keywords:** Vedaranyam, Vedaranya Puranam, Saiva Siddhanta, Pati-Pasu-Pasam, Grace

## முன்னுரை

சைவசித்தாந்தம் தமிழ்ச் சமயத் தத்துவங்களில் முதன்மையானதாக விளங்குகிறது. சிவனைப் பதி எனவும், உயிரைப் (ஆன்மாவை) பசு எனவும், ஆன்மாவைப் பந்திக்கும் அறியாமையைப் பாசம் எனவும் விளக்கும் இத்தத்துவங்கள், பக்தி மற்றும் அறிவு இரண்டையும் ஒருங்கிணைப்பதாக அமைகிறது. வேதாரணிய புராணத்தில், இறை மகிமைக் கதைகள், பக்தர்களின் தவம், தானம், பக்தி, வினைப்பயன் அனுபவம், இறையருள் பெற்றல் ஆகியவை சைவசித்தாந்த நடைமுறை விளக்கங்களாக அமைகின்றன. குறிப்பாக ஆன்மா பாசத்தால் கட்டுண்டு துன்புறுவது, இறையருளால் மலங்கள் நீங்கி வீடுபேறு அடைவது போன்ற சித்தாந்தக் கருத்துக்களை இவ்வாய்வானது எடுத்துரைக்கிறது.

## வேதாரணிய புராணம் காட்டும் முப்பொருள் தத்துவங்கள்

சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடாக விளங்குவது முப்பொருள் தத்துவம் ஆகும். பதி என்பது பரம்பொருளாகிய சிவத்தையும், பசு என்பது அழிவற்ற ஆன்மாவையும், பாசம் என்பது

ஆன்மாவைக் கட்டிப்போடும் பந்தங்களையும் குறிக்கிறது. வேதாரணிய புராணம் இம்முப்பொருள்களையும் தலச்சிறப்பு, இறையருள், பக்தி வழிபாடு மற்றும் வீடுபேறு ஆகிய கருப்பொருட்களின் வழியாக விளக்குகிறது.

## இறைத் தத்துவம்

திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் இறைவன் அருவுருவமான இலிங்க வடிவில் எழுந்தருளி அருள் வழங்கும் புவனிவிடங்கராவார். இவர் ஆதியும் அந்தமும் இல்லாதவராவார். அனைத்திற்கும் காரணனாகவும், ஐந்தொழில்களை நிகழ்த்துபவராகவும் விளங்குகிறார். இத்தகைய இறைவன் கருணை வடிவமாகச் சுட்டப்படுகிறார். உயிர்களைப் பாசத்திலிருந்து விடுவிப்பதே பதியின் அருட்செயல் என்று புராணம் வலியுறுத்துகிறது. நான்கு மறைகளும் அவரிடமிருந்து வெளிப்படுவது, அவர் பரம்பொருள் என்பதை உணர்த்துகின்றன. திருமறைக்காடு என்னும் பெயரே மறைகள் சிவத்தில் ஒளிந்தன என்னும் புராணக் கருத்தை உணர்த்துகிறது. இதன்மூலம் சிவன் வேதம்மூல காரணன், எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருள் என்ற இலக்கணத்தைப் பெறுகிறார். இதனை,

“ஓதரு வேதாந் தத்தி னுணர்வுறு முணர்வே போற்றி

வேதகா னனத்தாய் போற்றி விளம்புதீர்த் தங்கட் கெல்லா

நாதனே யாகி நிற்கு நற்பரஞ் சுடரே போற்றி

பாதக மனைத்து நீக்கும் பராபர போற்றி போற்றி” (வேதாரணிய புராணம் - பா.எண்:127)

என்ற பாடலில் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுவதிலிருந்து, திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் பரம்பொருளின் மேன்மையை அறியலாகிறது.

## அருள் தத்துவம்

சைவ சித்தாந்தக் கருத்துப்படி பசுவானது ஆணவம், கன்மம், மாயை உள்ளிட்ட பாசத்தில் சிக்கியிருக்கிறது. அதை விடுவிப்பது பதியின் அருள் மட்டுமே. வேதாரணியப் புராணத்தில் பக்தர்களின் பாவநிவர்த்தி, தவப்பயன் அளித்தல், வீடுபேறு வழங்குதல் ஆகியவை பதியின் கருணையைக் கூறுகிறது. மேலும், ஆன்மாவை பாசத்திலிருந்து விடுவித்து சிவபோக நிலையினை அளிப்பதே அவரது கருணையின் நிறைவாக அமைகிறது. வேதாரணிய புராணத்தில் பக்தர்கள் சிவ அருளால் உயர்ந்த நிலையை அடைவதே இறையின் கருணையினை உறுதிப்படுத்துகிறது.

“புண்ணி யங்கள் பொருந்து சிவதல

மெண்ணி லாதன யாவினு மேலது

நண்ணு போகமு முத்தியு நல்குமா

மண்ண லாவுல கெங்கு மதிப்பது.” (வேதாரணிய புராணம் - பா.எண்:78)

என்ற பாடல்வழி வேதாரணிய புராணம் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.

## ஆன்ம தத்துவம்

பசு என்பது ஆன்மா. அது அறிவுடையதாய் இருந்தாலும், முழுமையான ஞானம் பெறாத நிலையில் உள்ளது. வேதாரணிய புராணமானது பக்தர்களின் வரலாறுகள் மற்றும் இறையருள் நிகழ்வுகள் மூலம் பசுவின் இலக்கணத் தன்மைகளை வெளிப்படுத்துகிறது. முதலாவதாகப் பசு அறிவுடையது. ஆனால், அதன் அறிவானது மறைக்கப்பட்ட நிலையில் உள்ளது. சைவ சித்தாந்தம் கூறுவது போல் ஆன்மா அறிவுடையதாகும். ஆனால், ஆணவம் காரணமாக அதன் அறிவு முழுமையாக வெளிப்படாது. வேதாரணிய புராணக் கதைகளில் மனிதர்கள் அறியாமையால் துன்பம் அனுபவிப்பதும், பின்னர் இறைவனை நாடி ஞானம் பெறுவதும் பசுவின் குறுகிய அறிவுத்தன்மையை உணர்த்துகிறது. இதனை,

“இப்படிச் சிறிது கால மியம்புறு வணிக னுந்தன்

கைப்பொரு ளுளது சேரக் கதிதரு தருமத் தாக்கி

யப்பெரு மனைவி தன்னோ டநுமர ணத்தாற் கூட

வொப்பரு முத்தி பெற்றா னுயர்தல மரணத் தாலே.” (வேதாரணிய புராணம்- பா.எண்:427)

என்ற பாடல் வழி ஏமாங்கதனின் கதையினைக் கூறி அறிவற்ற ஆன்மா செய்யும் பயனற்ற செயலையும், பின்பு அறிவு நிலையினை உணர்ந்து புண்ணியங்கள் செய்து முக்தி நிலையை அடைவதையும் பரஞ்சோதி முனிவர் விளக்குவதை அறியமுடிகிறது. மேலும் இத்தலத்தில் முனிவர்கள், பக்தர்கள், தேவர்கள் ஆகியோர் இறையருளால் உயர்ந்த நிலையினை அடைவது பசுவின் பக்குவநிலையினை எடுத்துக்காட்டுகிறது. உயிர் தனித்து முக்தி பெற முடியாது என்பதயும் பதியின் அருளே பசுவிற்கு முக்தியினை அளிக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

## வேதாரணிய புராணம் காட்டும் மும்மலங்கள்

பசு பாசத்தால் கட்டுப்பட்டது. ஆணவம், கன்மம், மாயை என்ற மூலங்கள் ஆன்மாவை உலக பந்தங்களில் சிக்க வைக்கின்றன. வேதாரணிய புராணத்தில் பக்தர்கள் தங்கள் பாவவினைப் பயனால் துன்புறுவது, பசு கன்மபந்தத்தில் இருப்பதை விளக்குகிறது. பாசம் அறிவை மறைக்கும் **சக்தியாகும்.** சைவ சித்தாந்தம் கூறும் மூலமலங்**களாக** ஆணவம், கன்மம், மாயை **இம்மூன்றும்** பாசத்தின் முக்கிய வழிகள். ஆணவம் ஆன்மாவின் அறிவைச் சுருக்குகிறது. கன்மம் செய்கையின் விளைவால் பிறவிச் சுற்றை உருவாக்குகிறது. மாயை பொருளுலகப் பற்றுகளை உண்டாக்குகிறது என்னும் தத்துவத்தை இப்புராணநூல் விளக்கியுரைத்துள்ளது.

### ஆணவ மலம்

ஆணவம் உயிரின் ஆதிக் குறையாகக் கருதப்படுகிறது. ‘நான்’ என்ற தன்மை, அகந்தை, இறையுணர்வு இல்லாமை ஆகியவை இதன் வெளிப்பாடுகள். வேதாரணிய புராணக் கதைகளில் தவம் செய்து இறைவனை அடையும் முனிவர்கள் தமது அகந்தையை ஒழித்தபின் ஞானம் பெறுகின்றனர். வேதாரணியத் திருத்தலத்தில் ‘மறைக் கதவு’ திறக்கப்பட்ட நிகழ்வு ஆணவமல நீக்கத்திற்குச் சான்றாக அமைகின்றது.

மறைக்கதவு - ஆன்மாவின் அறிவினை மறைக்கும் ஆணவம்

இறை அருள் - ஞான வெளிச்சம்

கதவு திறத்தல் - ஆணவ மல நீக்கம்

இதன் மூலம் இறைவன் அருளின்றி ஆணவம் அகலாது என்பதை உணரமுடிகின்றது. மேலும் வேதாரணிய புராணத்தில் மனிதர்கள் அறியாமையால் தவறான செயல்களில் ஈடுபட்டு துன்புறுவது பாசத்தின் செயல்பாட்டை உணர்த்துகிறது. இதனை,

“வாட வெம்பசி யாலு ளங்கண் மயங்கி வாணிப முற்றியே

நாடொ ணாமிரு கங்க ளைக்கொடு நஞ்ச ணைந்திடு வெஞ்சரத்

தோட வோட வடர்ந்து நாளுமவ் வூன ருந்தி வருந்தியே

வேடர் போலவர் கான கந்தொறு மேவி யேதிரி வேளையில்” (வேதாரணிய புராணம் - பா.எண்:431)

என்ற பாடல் வழி ஏமாங்கதனின் புதல்வர்களான சுவேதன், வசுதேவன் என்ற இருவரின் கதைகள் மூலம் அறியாமையால், ஆன்மா அடையும் துன்பங்களை பரஞ்சோதி முனிவர் எடுத்துரைப்பதை அறியமுடிகிறது. பாசம் உயிரின் அனுபவ வளர்ச்சிக்கும், முக்தியடைவதற்கும் காரணமான கருவியாகவும் விளங்குவதை உணரமுடிகின்றது.

### கன்ம மலம்

கன்ம மலம் என்பது உயிர் செய்த செயல்களின் தவிர்க்க முடியாத அனுபவ விளைவு. அது பிறவித் தொடர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. இதனை,

“இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்பது” (சிவஞான போதம்-இ.சூத்.மூ.அதி)

என்ற சூத்திரத்தின் வழி சிவஞானபோதம் கூறுவதை அறியமுடிகின்றது. மேலும் உயிர்களானது இருவினைப் பயன்களை நுகர்வதற்கு மீண்டும் பிறப்பெடுக்கும் என்பதனை உண்மை விளக்கமானது,

“ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக

மாறா மலம்இரண்டும் வாசொல்லக் - கூறில்

அறியாமை ஆணவம்நீயானசுக துக்கம்

குறியா வினைஎன்று கொள்." (உண்மை விளக்கம் - பா.எண்:22)

என்ற பாடல் வழி விளக்குவதை அறியமுடிகிறது. மேலும் இதனை, வேதாரணிய புராணமானது,

"மரித்திட வெவையுந் தாங்கு மூழியா மயமான மீளத்

தரித்திடும் வினைக்கீ டாகத் தருமுட லித்த லத்தை

விரித்திடி லுலகுக் கெல்லாம் வினையறுத் துடலை மீளப்

பரித்திடா தருளி னாலே யிறைக்கிது பரம யானம்." (வேதாரணிய புராணம் - பா.எண்:162)

என்ற பாடல் வழி உலகவுயிர்கள் எல்லாம் இறந்து போக, மீண்டும் அவ்வுயிர்களுக்கு உடலைத்(பிறவி) தருவது, உயிர்களுடைய கன்ம வினைகளே என்று பரஞ்சோதி முனிவர் கூறுவதை அறியமுடிகிறது. மேலும் நல்வினைப் பயனால் உயிர்கள் அடையும் நன்மையையும், தீவினைப் பயனால் உயிர்கள் அடையும் துன்பங்களையும் விரிவாக எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. கன்மத்தின் மூலம் ஆன்மா அனுபவம் பெற்று பக்குவம் அடைவதையும் காணமுடிகிறது.

## மாயை மலம்

வேதாரணிய புராணக் கருத்துப்படி மாயை நித்தியமானது, ஆனால் அது சுயஅறிவில்லாதது. அது இறைவனின் ஆட்சிக்குட்பட்தாக இருந்து, அவன் சித்தத்தின்படி உலக உருவாக்கத்தில் பயன்படுகிறது. மாயை தனித்த சக்தி அல்ல, அது இறைவனின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு சாதனப் பொருள். ஆன்மாவை தனது உண்மையான சிவஞான நிலையை அடையாமல் தடுக்கும் மறைமுகத் திரைபோல மாயை செயல்படுகிறது. திருமறைக்காட்டில் வீற்றிருக்கின்ற சிவலிங்கமானது பிரமனது ஆயுள் முடியும் காலத்திலும் அழிவின்றி நிலைத்திருக்கும் என்றும், மும்மலங்களில் ஒன்றான மாயையும் இந்த இலிங்கத்தில் ஒடுங்கும் என்பதையும்,

"ஆத லாலிவ் விலிங்க மயன்பதம்

போது காலமு நாசம் பொருந்திடா

வேத மாகம மேதை சராசர

மோது மாயையு மீதி லொடுங்குமால்." (வேதாரணிய புராணம் - பா:எண்-208)

என்ற பாடல்வழி புராணம் கூறுவதை உணரமுடிகிறது.

## சைவ நாற்பாதங்கள்

இறைவனை அடைவதற்கான நான்கு மார்க்கங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியன அமைகின்றன. இந்நான்கு மார்க்கங்களே, ஆன்மா படிப்படியாக உயர்ந்து சிவனை அடைய உதவும் ஆன்மீக நிலைகளாகும். சரியையானது உடலால் இறைப்பணி செய்தல். கிரியை மனதாலும் உடலாலும் புறத்தே பூசித்தல். யோகம் மனதை ஒருமுகப்படுத்தி புறபூசயை விடுத்து அகத்தில் இறைவனைத் தியானித்தல், யோகத்தின் உச்சத்தில் பதியும் உண்மையான அறிவே ஞானமாகும். இதனை,

"ஈண்டு, இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால்

ஞானம் நிகழும் என்றது." (சிவஞான போதம் - எ.சூத்.மு.அதி)

என்று சிவஞான போதம் உரைக்கின்றது. முன்பு செய்த சரியை, கிரியை, யோகமாகிய தவங்களே சிவஞானத்தைக் கொடுக்கும். மேலும் நாற்பாதங்களுள் சரியை நெறியே வேதாரணிய புராணத்தில் மிகுதியாக அமைகின்றது. வினைகளைத் தீர்த்தருளும் திருமறைக்காட்டில் விளங்கும் சிவபெருமானுடைய அழகிய திருவடியில் அணிவிப்பதற்குரிய மலர்களையும், இலைகளையும் தரும் நந்தவனத்தை தமது உடல் உழைப்பினால் சுத்தம் செய்வது போன்ற பல்வேறு இறைப்பணிகள் சரியை நெறியுள் அடங்குகின்றன. இதனை,

"அண்ணலவ் வாலயத் தற்ப மாயினும்

பண்ணிடும் பணிசிவ பதத்தை நல்குமா

லெண்ணருந் திருப்பணி யியற்றி னோர்பெறும்

புண்ணியந் தன்னையார் புகல வல்லரே." (வேதாரணிய புராணம் - பா.எண்:112)

என்ற பாடல்வழி பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுவதை அறியமுடிகிறது. மேலும், திருக்கோயிலில் செய்யும் இறைப் பணியானது மிகவும் சிறியதாயினும் அது வீடுபேற்றைக் கொடுக்கின்றன என்றும் அங்கு அளவிட முடியாத அரிய திருப்பணிகளைச் செய்தோர், சிவ புண்ணியத்தை எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர் என்றும் புராணநூல் கூறுவதை அறியமுடிகின்றது.

## யோக மார்க்கம்

மனதினை ஒருமுகப்படுத்தி, புறப் பூசையை விடுத்து அகத்தில் இறைவனைத் தியானித்தல் யோக மார்க்கமாகும். இதனை,

“முந்து வேள்விகண் முடிக்கினு முயன்றவப் பொருள்கொண்

டந்த நற்பய னாங்குறு மஞ்செழுத் தொருக்காற்

சிந்தை செய்யினூ றாயிரஞ் செபபலந் தருமற்

றெந்த மந்திரஞ் செபிக்கினு முடன்சித்தி யெய்தும்.” (வேதாரணிய புராணம் - பா.எண்:114)

என்ற பாடலில் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகிறார். வேதங்கள் வணங்கிய வேதாரணியத் திருத்தலத்தில், திருவைந்தெழுத்தை ஒருமுறை தியானஞ் செய்தால் அது ஒரு நூறாயிரம் முறை செபம் செய்த பலனைத் தரும். இது இறைவனை அடைவதற்கான யோக நெறியாக புராணநூல் குறிப்பிடுகிறது.

## முடிவுரை

வேதாரணிய புராணம் சைவ சித்தாந்தத்தின் தத்துவங்களை புராண மரபின் வழியாக விளக்குகின்ற கருவூலமாக அமைகின்றதை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. பதி-பசு-பாசம் என்ற முப்பொருள் அமைப்பு புராணக் கதைகளில் உள்ளார்ந்த தத்துவ வடிவமாக அமைந்திருப்பது தெளிவாகிறது. ஆன்மா பாசங்களால் கட்டுண்டு பிறவி சுழற்சியில் சிக்கிக் கிடப்பதும், இறைவன் அருளால் மலங்கள் நீங்கி விடுதலை பெறுவதும் சைவசித்தாந்தத்தின் மையக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் செயல்பாடுகள் மனித வாழ்வின் இன்ப, துன்ப அனுபவங்களின் வழி விளக்கப்படுகின்றன. இறைவனை அடைவதற்கான சைவநாற்பாதங்களில் சரியை நெறியே பக்தர்களின் செயல்பாடுகளிலும், வழிபாட்டு முறைகளிலும் மிகுதியாக வெளிப்படுவதைப் புராணநூல் எடுத்தியம்புகிறது. எதிர்வரும் காலங்களில் வேதாரணிய புராணமானது, சைவ சித்தாந்தத்தை எளிமையான முறையில் புரிந்து கொள்ள **உதவும் தத்துவ நூலாக** அமையும் என்பதை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகின்றது.

## References

ஆனந்தராசன், ஆ.உண்மை விளக்கம்- உரை நூல், அருள்நந்தி சிவம் புத்தக நிலையம், திருநெல்வேலி

சுப்பிரமணியம் பிள்ளை, கா. மெய்கண்டாரும் சிவஞான போதமும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

நாகராசு, கா. பரஞ்சோதி முனிவர் அருளிய வேதாரணிய புராணம் மூலமும் உரையும், வெளியீடு-ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License